# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2093/41 - 2018 ඔක්තෝබර් මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.10.18

*2093/41 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பெரும்பாக குருநாகல் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தின், வலய இலக்கம் 2 இல் (வாவி சுற்றுவட்டப் பாதை) மலக்கழிவுக் குழாய்களைப் பொருத்துவதற்காக காணித்துண்டுகளின் பயன்பாட்டு உரிமையை எடுத்துக்கொள்ள தேவைப்படுவதால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான இக்கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஒற்றோபர் 15,
5/2/3/1420.

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 831, குருநாகல் நகர வடக்கு கிராம அலுவலர் பிரிவில், வெலன்கொல்ல கிராமத்தில் அமைந்த சுமார் 2.5 பேர்ச்சஸ் முழு அளவிலான கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டுகள் இரண்டு.

**காணித்துண்டிலக்கம் : 1 ; காணியின் பெயர் : உயன்வத்த ; காணியின் விஸ்தீரணம் : 0.5 பேர்ச்சஸ்.**

*காணியின் எல்லைகள் :*

வடக்கு : ஜே. கே. பீ. சமன் ஜயவர்தன அவர்கள் உரிமை கோரும் காணிக்குச் செல்லும் பாதை ;
கிழக்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி மற்றும் ஜே. கே. பீ. சமன் ஜயவர்தன அவர்கள் உரிமை கோரும் காணி ;
தெற்கு : வீதி அபிவிருத்தி அதிகார சபை உரிமை கோரும் காணி ;
மேற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* 1. திருமதி பீ. ஏ. ஜே. சீ. சந்திரலதா,
இல. 124, புத்தளம் றோட்,
குருநாகல்.

**காணித்துண்டிலக்கம் : 2 ; காணியின் பெயர் : உயன்வத்த ; காணியின் விஸ்தீரணம் : 2.0 பேர்ச்சஸ்.**

*காணியின் எல்லைகள் :*

வடக்கு : வாவி சுற்றுவட்டப் பாதை ;
கிழக்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* 1. திரு. ஜே. கே. பீ. சமன் ஜயவர்தன,
இல. 107/1, வெலன்கொல்ல றோட்,
குருநாகல்.

*11-142*

---

## *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பெரும்பாக குருநாகல் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தின், மலக்கழிவுக் குழாய்களைப் பொருத்துவதற்காக குருநாகல் நொயெல் செனவிரத்ன மாவத்தையில் அமைந்துள்ள காணித்துண்டொன்றின் பயன்பாட்டு உரிமையை எடுத்துக்கொள்ள தேவைப்படுவதால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான இக்கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, ஒற்றோபர் 15,*
*5/2/3/1421.*

## அட்டவணை

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 839, குருநாகல் நகர மத்திய கிராம அலுவலர் பிரிவில், குருநாகல் கிராமத்தில் அமைந்த சுமார் 1.5 பேர்ச்சஸ் முழு அளவிலான கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு.

*காணியின் எல்லைகள் :*

வடக்கு : சிசிற சீமன்த ஜயசிங்ஹ உரிமை கோரும் காணி (128/A, நொயெல் செனவிரத்ன மாவத்தை) ;
கிழக்கு : நொயெல் செனவிரத்ன மாவத்தை ;
தெற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : டீ. எம். வீரகோன் உரிமை கோரும் காணி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* 1. டாக்டர் எஸ். எம். எச். எம். கே. சேனாநாயக,
இல. 28, நொயெல் செனவிரத்ன மாவத்தை,
குருநாகல்.

*11-143*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.